**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

**தேதி 16.07.2025 நேரம் மாலை 6.10 மணி**

**-----------------------------------------------------------------------------------**

*தலைப்புச் செய்திகள்*

விண்வெளிப் பயணத்தில் இருந்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பி உள்ள, இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லா-வை பாராட்டி, மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு வரும் ஞாயிற்றுக் கிழமை புதுடெல்லியில், அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

புதுச்சேரி பாகூரில், 1.64 கோடி ரூபாய் செலவில், புதிதாக கட்டப் பட்டுள்ள பேருந்து நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்து, பேருந்துகளை இயக்கி வைத்தார்.

இவ்வாண்டு சுதந்திர தின விழாவை ஒட்டி, பாதுகாப்பு அமைச்சகம், மை-கவ் இணைய தளத்துடன் இணைந்து, பல்வேறு போட்டிகளுக்கு, ஏற்பாடு செய்துள்ளது.

**------------------------------**

*அமைச்சரவை 1 (7)*

வரலாற்றுச் சிறப்புமிக்க விண்வெளிப் பயணத்தில் இருந்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பி உள்ள, இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லா-வை பாராட்டி, மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று அமைச்சரவை கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். அமைச்சரின் பேட்டி குறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*அமைச்சரவை 2 (12)*

**(வாய்ஸ்)**

சுபான்ஷூ சுக்லாவின் விண்வெளிப் பயணம், விண்வெளி ஆராய்ச்சித் துறையில், உலக அளவிலான இந்தியாவின் அந்தஸ்தை கணிசமாக உயர்த்தி இருப்பதாகவும், சொந்தமாக விண்வெளி நிலையம் அமைப்பதற்கான இந்தியாவின் முயற்சிகள், மேலும் ஒருபடி முன்னேறி இருப்பதாகவும், மத்திய அமைச்சர் திரு.

அஷ்வினி வைஷ்ணவ் கூறினார். **நுண்நிலை புவிஈர்ப்புச்** சூழலில், **தசை மீளுருவாக்கம், நுண்ணுயிர்ப் பெருக்கம்**, பயிர் தழைப்புத் திறன் உட்பட, இந்திய வீரர் சுக்லா மேற்கொண்ட பல்வேறு ஆய்வுகளால், உலக அளவிலான அறிவியல் துறையும், இந்தியாவின் எதிர்கால விண்வெளித் திட்டங்களும் மிகவும் பயன் பெறும் என, அவர் தெரிவித்தார். இந்த சாதனையை சாத்தியமாக்கிய இஸ்ரோ விஞ்ஞானிகள், பொறியாளர்கள் உட்பட அனைவருக்கும், மத்திய அமைச்சரவை பாராட்டு தெரிவித்துள்ளது.

-------------------------------

*அமைச்சரவை*-NLC (16)

பொருளாதார விவகாரங்களுக்கான, மத்திய அமைச்சரவைக் குழு, பொதுத் துறை நவரத்னா நிறுவனங்களின் முதலீடுகள் பற்றிய நடப்பு வழிகாட்டு நெறிமுறைகளில் இருந்து, NLC-India நிறுவனத்திற்கு, சிறப்பு விதிவிலக்கு ஒன்றை அனுமதித்துள்ளது. NLC- India நிறுவனம், அதன் துணை நிறுவனமான, NLCI-Renewables நிறுவனத்தில், 7 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய இதனால் ஏதுவாகும். புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான மின்சார உற்பத்தித் திறனை, 2030ஆம் ஆண்டிற்குள், 10 கிகாவாட்-ஆக உயர்த்தும் இலக்கை எட்டுவதில், NLC- India நிறுவனத்திற்கு மிகவும் உதவிகரமாக இம்முடிவு அமையும் என்று, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதேபோல, மகாரத்னா பொதுத் துறை நிறுவனங்களுக்கான அதிகாரப் பகிர்வு விதிமுறைகளின் கீழ், NTPC நிறுவனத்திற்கும், கூடுதல் முதலீட்டு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. NTPC நிறுவனம், அதன் துணை நிறுவனமான NTPC Green Energy நிறுவனத்தில், 20 ஆயிரம் கோடி ரூபாய் வரை, முதலீடு செய்ய இதனால் ஏதுவாகும் என்றும், அமைச்சர் தெரிவித்துள்ளார்.

-------------------------------

*அனைத்துக் கட்சி* (9)

வரும் 21ஆம் தேதி தொடங்க உள்ள, நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு வரும் ஞாயிற்றுக் கிழமை, அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும், அலுவல்கள் சுமூகமான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில், அரசு இக்கூட்டத்தின் போது, அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பை நாடும். அடுத்த மாதம் 21ஆம் தேதி வரை நடைபெற உள்ள, நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரில், பல்வேறு முக்கிய மசோதாக்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட உள்ளன.

-------------------------------

*ஜன் தன்* (13)

நாட்டு மக்கள் அனைவரையும், முறையான நிதிக் கட்டமைப்பின் கொண்டு வருவதற்கான, தேசிய இயக்கத்தின் முதல் 2 வாரங்களில், 1 லட்சத்து 40 ஆயிரம் ஜன் தன் வங்கிக் கணக்குகள் தொடக்கப் பட்டுள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது. மத்திய அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள், மக்களை நேரடியாக சென்று சேர்வதை உறுதிப்படுத்தும் வகையில், மத்திய நிதி அமைச்சகம், கடந்த 1ஆம் தேதி முதல், இந்த 3 மாத இயக்கத்தை அமல்படுத்தி வருகிறது. இந்த இயக்கத்தின் கீழ், அனைத்து கிராம பஞ்சாயத்து, மற்றும், நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில், இதுவரை 43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, ஜன் தன், ஜீவன் ஜோதி, அடல் பென்ஷன் போன்ற பல்வேறு திட்டங்களில், பயனாளிகள் சேர்க்கப் பட்டுள்ளனர். வரும் செப்டம்பர் 30ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த இயக்கத்தின் போது, மக்கள் 2 லட்சத்து 70 ஆயிரம் இடங்களில், இத்தகைய முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

-------------------------------

*அனில் சவுகான்* (13)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பாகிஸ்தான் ராணுவம் பயன்படுத்திய ஆளில்லா குட்டி விமானங்கள், மற்றும், ஏவுகணைத் திறனுடன் கூடிய ட்ரோன்களை, இந்திய ராணுவத்தினர் வெற்றிகரமாக தாக்கி அழித்ததாக, முப்படைகளின் தலைமை தளபதி, ஜெனரல் அனில் சவுகான் கூறியுள்ளார். ஆளில்லா குட்டி விமானங்கள், மற்றும், ட்ரோன் எதிர்ப்பு வசதிகள் குறித்து, புதுடெல்லியில், இன்று நடைபெற்ற பயிலரங்கில் அவர் பேசுகையில், பாகிஸ்தானிய ட்ரோன்களால், இந்தியாவின் சிவில் அல்லது ராணுவக் கட்டமைப்பில், எந்த சேதமும் ஏற்படவில்லை என்றார். பாதுகாப்புத் துறையில் வெளிநாட்டு தொழில் நுட்பங்களை நம்பி இருப்பதால், பாதுகாப்புத் தயார் நிலை பலவீனம் ஆகும் என்பதால், நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள தேவையான தொழில் நுட்பங்களை, உள்நாட்டிலேயே உருவாக்கும் முயற்சிகளில், கூடுதல் முதலீடுகள் அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

-------------------------------

*பாகூர்* (16)

நகர்ப்புற வசதிகளை கிராமங்களுக்கும் வழங்குவதற்கான, ரூர்பன் திட்டத்தின் கீழ், பாகூரில், 1.64 கோடி ரூபாய் செலவில், புதிதாக கட்டப் பட்டுள்ள பேருந்து நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்து, பேருந்துகளை இயக்கி வைத்தார். புதுச்சேரியில் நடப்பு அரசு பதவிக்கு வந்த பின்னர், உள்கட்டமைப்புத் துறைக்கான நிதி ஒதுக்கீடுகள், ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கப் படுவதாகவும், இவ்வாண்டு 13 ஆயிரத்து 500 கோடி ருபாய் நிதி ஒதுக்கீட்டுடன், பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். இது அல்லாது ஊரகத் தொகுதிகளில், உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள, கூடுதலாக 200 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். பாகூரில், 5 ஆயிரத்து 500 சதுர

அடி கட்டிடப் பரப்புடன், 1.52 ஹெக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில், 4 பேருந்து நடை மேடைகள், 9 கடைகள், மற்றும், இதர வசதிகள் இடம்பெற்றுள்ளன. பேருந்து நிலையத்தின் திறப்பு விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில் குமார், மற்றும், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

-------------------------------

*புதுச்சேரி சந்திப்பு* (5)

நிதி ஆயோக் உறுப்பினர் டாக்டர் அரவிந்த் வீர்மானி, இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, சட்டப் பேரவையில் உள்ள அவரது அலுவலகத்தில், மரியாதை நிமித்தம் சந்தித்து பேசினார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், தலைமைச் செயலர் டாக்டர சரத் சௌகான் உள்ளிட்டோர் இந்த சந்திப்பின் போது உடன் இருந்தனர்.

-------------------------------

*சுதந்திரம்-போட்டி 1 (4)*

இவ்வாண்டு சுதந்திர தின விழாவை ஒட்டி நடைபெற உள்ள பல்வேறு நிகழ்ச்சிகளின் ஒருபகுதியாக, பாதுகாப்பு அமைச்சகம், மை-கவ் இணைய தளத்துடன் இணைந்து, பல்வேறு போட்டிகள், மற்றும் செயல்பாடுகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்….

**(வாய்ஸ்)**

*சுதந்திரம்-போட்டி* 2 (13)

**(வாய்ஸ்)**

சுதந்திர தினவிழா போட்டிகளில்,

**தேசிய பாதுகாப்பில் சுயசார்புக்கான புதிய படைப்புகள்**, புதிய இந்தியாவை உருவாக்குவதில் பெண்களின் பங்கு உள்ளிட்ட தலைப்புகளில், வினாடி-வினா போட்டிகளும்,

**தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் கொள்கைக்கு, ஆபரேஷன் சிந்தூர் மூலமான மறு வரையறை** என்ற தலைப்பில், கட்டுரைப் போட்டியும்,

**புதிய இந்தியா-அதிகாரம் பெற்ற இந்தியா** என்ற தலைப்பில், ஓவியப் போட்டியும்,

**மரபுச் சின்னங்கள், மற்றும், விடுதலை போராட்டத்துடன் தொடர்புடைய இடங்கள் குறித்து**, ரீல் தயாரிப்புப் போட்டியும், இடம்பெறுகின்றன.

ஜூலை 31ஆம் தேதி வரை, பொது மக்கள், மை-கவ் இணைய தளம் மூலம் இப்போட்டிகளில் பங்கேற்கலாம்.

இப்போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு, ரொக்கப் பரிசு வழங்கப்படும் என்றும், வெற்றியாளர்கள், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டியாளர்களுக்கு, புதுடெல்லி சுதந்திர தின விழாவில் கலந்து கொள்வதற்கான அழைப்பு அனுப்பப்படும் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது.

-------------------------------

*காரைக்கால் என்ஐடி (11)*

காரைக்காலில் அமைந்துள்ள, புதுச்சேரி-என்ஐடி உயர் கல்வி நிறுவனத்தின் ஆட்சிக் குழுத் தலைவராக, டாக்டர் கோட்டா ஹரி நாராயணா, மத்திய கல்வி அமைச்சகத்தால் நியமிக்கப் பட்டுள்ளார். தற்போது, பனாரஸ் இந்து பல்கலைக்கழக வாரணாசி ஐஐடி உயர் கல்வி நிறுவனத்தின் ஆட்சிக் குழுத் தலைவராக உள்ள டாக்டர் ஹரி நாராயணா, காரைக்கால்-என்ஐடி உயர்கல்வி நிறுவனத்தின் ஆட்சிக் குழுத் தலைவர் பொறுப்பை, கூடுதல் பொறுப்பாக வகிப்பார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. பாதுகாப்பு, கல்வி, மற்றும், பொதுக் கொள்கையில், குறிப்பிடத்தக்க பல்துறை பங்களிப்புகளை வழங்கி உள்ள, பத்மஸ்ரீ டாக்டர் கோட்டா ஹரி நாராயணா, நாட்டின் பொறியியல், மற்றும் கல்வி நிர்வாகத்தில், மிகுந்த மதிப்புகுரிய நபர்களில் ஒருவராக திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*உடல் பருமன்* (17)

நாட்டில் உடல் பருமன் பிரச்சனை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, பள்ளிகளில் **எண்ணெய் குழு**க்களை அமைத்து, மாணவர்களிடையே ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்குமாறு, மத்திய இடைநிலைக் கல்வி வாரியம், பள்ளிகளுக்கு அறிவுறுத்தி உள்ளது. மாணவர்களிடையே, ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தையும், போதிய அளவு உடல் செயல்பாடுகளையும் பள்ளிகள் ஊக்குவிக்க வேண்டும் என்றும் அறிவுறத்தப் பட்டுள்ளது. மாணவர்கள், பள்ளிக்கு நடந்து வருவதையும், பள்ளியில், படிகட்டுகளை பயன்படுத்துவதையும், பாட வேளைகளுக்கு இடையே, உடற்பயிற்சிக்கான சிறு இடைவேளை எடுப்பதையும், பள்ளிகள் ஊக்குவிக்க வேண்டும் என, சிபிஎஸ்இ அறிவுறுத்தி உள்ளது. உலக அளவிலான நோய்ச் சுமை பற்றிய லேன்செட் அறிக்கையின்படி, இந்தியாவில், உடல் பருமன் பிரச்சனையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, 2050ஆம் ஆண்டிற்குள், 45 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளதும், அவ்வாறு அதிகரிப்பதை அனுமதித்தால், உலகிலேயே உடல் பருமன் பிரச்சனை அதிகம் உள்ள 2ஆவது நாடாக இந்தியா மாறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*வானிலை* (11)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, வரும் 21ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும்,

நீலகிரி, தேனி, தென்காசி மாவட்டங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, குமரி மாவட்டம் **மாம்பழத் துறையாறு** உள்ளிட்ட இடங்களில், 2 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-------------------------------

*மகளிர் கிரிக்கெட்* (6)

இந்தியா-இங்கிலாந்து மகளிர் அணிகளுக்கு இடையே, இன்று சவுத் ஆம்ப்டனில் நடைபெறும், முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், டாஸ் ஜெயித்து முதலில் ஆடும் இங்கிலாந்து அணி, சற்று முன்வரை, ----- ஒவர்களில், ----- விக்கெட் இழப்பிற்கு, ----- ரன் எடுத்து இருந்தது. இரு அணிகளுக்கும் இடையே, 2ஆவது ஒருநாள் போட்டி, வரும் 19ஆம் தேதியும், 3ஆவது மற்றும் இறுதிப் போட்டி, 22ஆம் தேதியும் நடைபெறும்.

-------------------------------

*நக்சலைட்* (6)

ஜார்கண்ட் மாநிலம் பொக்காரோ மாவட்டத்தில் இன்று, 2 நக்சல் தீவிரவாதிகள், பாதுகாப்புப் படையினர் உடனான மோதலில் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதில் ஒரு தீவிரவாதியின் தலைக்கு, ஏற்கனவே 5 லட்சம் ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டு இருந்தது. JJMP தீவிரவாதி லவ்லேஷ் கஞ்சு, நேற்று ஜார்கண்டில், லாத்தேஹார் போலீசாரிடம் சரணடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

*சுற்றுலா (12)*

மத்திய சுற்றுலா அமைச்சகத்தின் கூடுதல் செயலர் சுமன் பில்லா, இன்று புதுடெல்லியில், தேசிய அளவிலான இளம் சமையல் கலைஞர் போட்டியை தொடக்கி வைத்தார். இந்தியாவின் சமையல் கலை மரபுகள், கலாச்சாரம், மற்றும், பிராந்திய சிறப்பு அம்சங்களின் அடிப்படையில், கட்டமைக்கப் பட்டவை என்றும், இம்மரபுகள் மறைந்து போகாமல் பேணிப் பாதுகாத்தல், மிக அவசியம் என்றும் அவர் கூறினார். உலக அளவிலான உணவுப் பழக்கங்களில், இந்திய சமையல் கலை மரபுகள், கால் பதிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். இந்திய சமையல் கலை சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து, மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, இளம் சமையல் கலைஞர் போட்டியில், பிராந்திய அளவிலான போட்டிகளை தொடர்ந்து, இறுதிப் போட்டி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம், புதுடெல்லியில் நடைபெறும்.

-------------------------------

விண்வெளிப் பயணத்தில் இருந்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பி உள்ள, இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷூ சுக்லா-வை பாராட்டி, மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு வரும் ஞாயிற்றுக் கிழமை புதுடெல்லியில், அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

புதுச்சேரி பாகூரில், 1.64 கோடி ரூபாய் செலவில், புதிதாக கட்டப் பட்டுள்ள பேருந்து நிலையத்தை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று திறந்து வைத்து, பேருந்துகளை இயக்கி வைத்தார்.

இவ்வாண்டு சுதந்திர தின விழாவை ஒட்டி, பாதுகாப்பு அமைச்சகம், மை-கவ் இணைய தளத்துடன் இணைந்து, பல்வேறு போட்டிகளுக்கு, ஏற்பாடு செய்துள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**